எமர்ஜென்ஸி கூட்டத்தில் கம்பெனி போர்டு ஆஃப் டைரக்டர்ஸ் எண்ணிக்கை 12ல் இருந்து 9 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இதில் ஆறு பேர் ஏ.சி. முத்தையா தரப்பினராக மாற்றப்பட்டிருக்கின்றனர். இதுவும் கம்பெனி நிர்வாகத்தின் சூழ்ச்சி வேலைதான்.



கனகராஜ்



பிரபாகரன்



கணபதி சுப்பிரமணியன்



குணசேகரபாண்டியன்

ஸ்பிக் ஆலையின் மூலப் பொருளான நாப்தாவை ஸ்பிக்குக்கு தந்து வரும் இண்டியன் ஆயில் கார்ப்பரேஷனுக்கு 300 கோடி ரூபாய் ஸ்பிக் செலுத்த வேண்டி இருக்கிறது. இது தொடர்பான வழக்கு இன்னும் நடந்து வருகிறது. இதைத் தீர்க்க என்ன நடவடிக்கை என்பது இன்னும் தெளிவாக்கப்படவில்லை.

ஸ்பிக் நிறுவனம் தூத்துக்குடி துறைமுகத்தை பயன்படுத்திய வகையில் துறைமுகத்துக்கு 1.48 கோடி ரூபாய் கடன் தர வேண்டியிருக்கிறது. இன்றைய நிலையில் அதை எப்படி ஸ்பிக்கால் தர முடியும்?

முக்கியமாக, ஸ்பிக் தனது கழிவுப் பொருளான ஜிப்சத்தை சேகரித்து ஜிப்சம் பிளான்ட் நடத்துவது அரசின் 410 ஏக்கர் குத்தகை நிலத்தில்தான்! இப்போது அரசு நிர்வாகம், 'குத்தகைப் பாக்கியாக ஸ்பிக் நிறுவனம் 168 கோடி ரூபாய் தர வேண்டும், என்று ஸ்பிக் நிறுவனத்துக்கு நோட்டீஸ் அனுப்பி இருக்கிறது. இன்றைய நிதி நெருக்கடியில் ஸ்பிக்கால் அரசுக்கு 168 கோடியை திருப்பி செலுத்த முடியுமா?

இவை அனைத்தும் 'பிப்ரவரிக்குள் ஸ்பிக் ஆலையைத் திறப்பேன்' என்று சொன்ன அமைச்சர் அழகிரிக்கும் தெரியும். ஆனால், அவர் இந்த முறைகேடுகள் மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்க எந்த முயற்சியும் செய்யவில்லை என்பதே உண்மை.

இத்தனை பிரச்சினைகளுக்கு மத்தியில் ஸ்பிக் ஆலை திறந்து வைக்கப்பட்டாலும், ஸ்பிக்கை தொடர்ந்து நடத்துவதிலும் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. 'இந்த ஆண்டிலிருந்து இயற்கை எரிவாயு பயன்படுத்தாமல் செயல்படும் உரத் தொழிற்சாலைகளுக்கு மானியம் கிடையாது' என்று ஏற்கெனவே மத்திய அரசு அறிவித்துவிட்டது. அப்படியானால் ஸ்பிக் ஆலைக்கு இயற்கை எரிவாயு எப்படி, எங்கிருந்து வரும் என்பதை தெளிவுப்படுத்தப்பட வேண்டும்.

அடுத்து வங்கிகளுக்கு தர வேண்டிய பணத்தையும், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனுக்கு நாப்தா வாங்கிய பணத்தையுமே ஸ்பிக் திருப்பிக் கொடுக்க திணறிக் கொண்டிருக்கும்போது தமிழக அரசு தனது குத்தகைப் பாக்கி பணத்தையும் கேட்பது இந்த நேரத்தில் சரிதானா? அரசின் இந்த செயல்பாடு, ஸ்பிக் நிறுவனம் மீண்டும் திறக்கப்படுவதில் அரசின் ஆர்வம் குறித்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. எனவே, ஸ்பிக் ஆலை திறக்கப்பட்டாலும் அது சீராக நடக்க வேண்டுமென்றால் என்னென்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல் 'ஸ்பிக்கை திறப்போம்' என்று வெறும் ஸ்டேட்மெண்ட் மட்டும் விடுவது மக்களை ஏமாற்றும் செயல்" என்றார் ஆவேசமாக.

அடுத்து நம்மிடம் பேசிய சி.பி.ஐ., ஏ.ஐ.டி.யு.சி. தொழிற்சங்க சட்ட ஆலோசகர் கணபதி சுப்பிரமணியன்,

"கிட்டத்தட்ட எண்பது கோடி ரூபாயில் துவக்கப்பட்ட ஸ்பிக் ஆலையில் முன்பு மத்திய அரசின் பங்கு 40 கோடியும், மாநில அரசின் பங்கு 32 கோடியும், எம்.ஏ. சிதம்பரத்தின் பங்கு 8 கோடியும் தான் இருந்தது. பிறகு படிப்படியாக நிறுவனத்தைக் கையகப்படுத்திய ஏ.சி. முத்தையா குடும்பத்தினர் ஸ்பிக்கில் இருந்து கிடைத்த பணத்தை வைத்து வெளி நாடுகளில் தொழில் துவங்கினர். அரசு அளித்த மானியத்தை தமது சுய வளர்ச்சிக்குப் பயன்படுத்தினர். விளைவு, ஸ்பிக் நிறுவனம் கடன் தொல்லையால் மூடப்பட்டது. இந்த நிலையில்தான் மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற அழகிரி 'ஸ்பிக் தொழிற்சாலையை விரைவில் திறப்பேன்' என்று தேர்தல் வாக்குறுதி கொடுத்தார். ஆனால், இன்று வரை ஸ்பிக் நிறுவனத்தின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. இந்த நிலையில் அரசுக்கு செலுத்த வேண்டிய குத்தகைப் பணம் 168 கோடி ரூபாயைக் கேட்டு அரசு ஸ்பிக் நிர்வாகத்துக்கு கடிதம் எழுதி இருக்கிறது என்பதைத்தான் நம்ப முடியவில்லை. குறைந்த பட்சம் ஸ்பிக் நிறுவனம் செயல்பட ஆரம்பித்து லாபம் ஈட்டத் துவங்கிய பிறகு அரசு தனது குத்தகைப் பாக்கியை கேட்டிருந்தால் ஸ்பிக் நலனில் அரசு அக்கறையுடன் இருப்பதாகக் கொள்ள முடியும். எனவேதான் ஸ்பிக் நிறுவனம் மீண்டும் திறக்கப்பட்டு திருப்திகரமாக இயங்குமா என்பதில் எங்களுக்குச் சந்தேகம் வருகிறது" என்றார் வேகமாக.

'ஸ்பிக், டாக் ஆலைகளை அரசு உடனடியாகத் திறக்க வேண்டும்' என்று போராடி வரும் கூட்டமைப்பு பொறுப்பாளர்கள் 'ஸ்பிக்' பிரபாகரன், 'டாக்' குணசேகரபாண்டியன் ஆகியோரிடம் பேசினோம்.

"ஸ்பிக் ஆலை செயல்படத் தேவையான 'நாப்தா' சப்ளை குறித்து ஸ்பிக் நிர்வாகம் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனுடன் பேச்சுவார்த்தையைத் துவக்கி இருப்பதாக அறிகிறோம். இந்தப் பேச்சுவார்த்தை வெற்றி பெறும் பட்சத்தில் வரும் 15ஆம் தேதியில் இருந்து ஸ்பிக் செயல்படத் துவங்கும் என்று நம்புகிறோம்" என்றனர் சிம்பிளாக.

"நலிவுற்ற நிலையில் இருக்கும் ஸ்பிக் உரத் தொழிற்சாலையை அரசே ஏற்று நடத்தும். இந்த பட்ஜெட்டில் அதற்கான அறிவிப்பு வெளியாகும்" என்று கம்யூனிஸ்ட் கட்சியினரும், தொழிற்சங்கங்களும் எதிர்பார்த்தன. ஆனால், இது குறித்து எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை. கொடுத்த வாக்குறுதி என்னவாயிற்று என்ற கேள்விக்கு மத்திய அமைச்சர் அழகிரிதான் பதில் சொல்ல வேண்டும்.

படங்கள்: ஜெபக்குமார்.